# திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றியம் போந்தூர் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் செயல்முறைகள்

*பிறப்பிப்பவர் :* **திருமதி. சரோஜா போந்தூர் மணி**

ந.க. எண் **56 / 2023 - 24** நாள் : **23.02.2024**

பொருள் :- மனைப்பிரிவு அனுமதி – போந்தூர் ஊராட்சி – போந்தூர்–ஆ கிராமம், புல எண் 495/8B – ல் **0.7166** ஏக்கர் **2900** ச.மீ குடியிருப்பு மனைப்பிரிவுக்கு நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடுதல் சார்ந்து.

பார்வை :- 1) மாவட்ட நகர் ஊரமைப்பு இணை இணக்குநர் / துணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் காஞ்சிபுரம் அவர்களின் ந.க. எண் PRCR39Z8/2024/TCP நாள் **29/01/2024**

2) போந்தூர் ஊராட்சியின் தீர்மான எண் 387, நாள் 08/02/2024

<u>உத்திரவு :-</u>

திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றியம், போந்தூர் ஊராட்சி மன்றம், போந்தூர்–ஆ கிராமம் புல எண் **495/8B**-ல் 0.7166 ஏக்கர், **2900** சதுர மீட்டர் பரப்பளவில் **மோகனா க/பெ.உமாபதி, எண்.17ஏ, பாரதியார் தெரு, சக்தி நகர், பாடி, சென்னை–600050** என்பவருக்கு சொந்தமான நிலத்தில் புதிய குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க பார்வை 1-ல் கண்டுள்ள கடிதத்த குறிப்பின் மூலம் "**ம.வ./,ந.ஊ.இ.எண் 14 /2024**" என எண்ணிட்டு அளித்துள்ள தொழில்நுட்ப அங்கீகாரத்தின்படியும், போந்தூர் ஊராட்சி மன்ற தீர்மானம் எண் 387, நாள் 08/02/2024 ன்படியும், தங்களால் அளிக்கப்பட்டுள்ள ஆவணங்களை கொண்டு **போந்தூர் - ஆ கிராம புல எண்கள் 495/8B-** ல் 0.7166 ஏக்கர், 2900 சமீட்டர் பரப்பளவில் **மனை எண்கள் 1 முதல் 28 வரை** அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இத்துடன் இணைத்துள்ள வரைபடத்தில் கண்டுள்ள விபரப்படியும் மற்றும் கீழ்காணும் நிபந்தனைகளுடன் ஊராட்சியில் நிர்வாக அனுமதி அளித்து இதன் மூலம் உத்திரவிடப்படுகிறது.

## <u>நிபந்தனைகள்</u>

1) மாவட்ட நகர் ஊரமைப்பு இணை இணக்குநர் / துணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் காஞ்சிபுரம் அவர்களின் ந.க. எண் PRCR39Z8/2024/TCP நாள் 29.01.2024 இணைக்கப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளும் தவறாது கடைபிடிக்கப்பட வேண்டும்.
2) **தானபத்திரம் எண்** 58/2024, **நாள்** 04.01.2024 போந்தூர் ஊராட்சிக்கு ஒப்படைக்கப் பட்டுள்ள சாலை மற்றும் பொது உபயோக இடங்களை எக்காரணம் கொண்டும் ஆக்கிரமிப்பு ஏதும் செய்யக்கூடாது.
3) தாங்களால் அளிக்கப்பட்டுள்ள சொத்திற்குரிய ஆவணங்கள் பிற்காலத்தில் தவறுதலாக அளிக்கப்பட்டது என்ற பட்சத்தில் இவ்வுத்திரவு தானாக இரத்தாகியதாகும். அதற்கு மனுதாரரே சட்டப்படி பொறுப்பாவார்.
4) இம்மனைப்பிரிவில் உள்ள மனைகளில் கட்டிடம் கட்டுவதற்கு முன்பாக இவ்வூராட்சியில் வரைபட அனுமதி பெறப்பட வேண்டும்.
5) இம்மனைப்பிரிவு இடத்தினை பிற்காலத்தில் அரசால் நில ஆர்ஜிதம் செய்யும்பட்சத்தில் மனைதாரர் அதற்கு கட்டுப்பட்டவராவார்.
6) மனைப்பிரிவில் சாலை ஓரங்களில் மரக்கன்றுகள் நட்டு பாதுகாக்கப்பட வேண்டும்.
7) மேற்கண்ட நிபந்தனைகள் மீறினால் தங்களுக்கு வழங்கிய மனைப்பிரிவு அங்கீகாரம் தானாகவே இரத்தாகிவிடும் என இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இணைப்பு : வரைபடம்-2

பெறுநர் :
**மோகனா த/பெ.உமாபதி**
**எண்.17ஏ, பாரதியார் தெரு,**
**சக்தி நகர், பாடி, சென்னை–600050**

சரோஜா
**தலைவர்**
**போந்தூர் ஊராட்சி,**
**திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றியம்**

நகல் : உயர்திரு. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) திருப்பெரும்புதூர் அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.

வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகம்,
காஞ்சிபுரம்.

ஓ.மு.3595/2023/இ2

நாள்: 19.05.2023

## தடையின்மைச் சான்று

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், போந்தூர் ஆ கிராமத்தில் பட்டா எண்.390, சர்வே எண்.495/8B-ல் 0.29.00 ஹெக்டர் பரப்பில் அமைந்துள்ள நிலத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க திருமதி.ப.மோகனா, க/பெ, R.உமாபதி, எண்.17, பாரதியார் தெரு, சக்தி நகர், பாடி, சென்னை–600 050 அவர்கள் தடையில்லாச் சான்று கோரி விண்ணப்பித்த அவர்களது மனு குறித்து 19.05.2023 அன்று புலத்தணிக்கை செய்து பின்வருமாறு சான்று வழங்கப்படுகிறது. தடையின்மைச் சான்று கோரியுள்ள புலங்கள் கிராம கணக்குகளில் கீழ்கண்டவாறு தாக்கலாகியுள்ளது.

| வ. எண் | பட்டா எண். | புல எண் | உப பிரிவு | பரப்பு ஹெக்டர்/ஏர் | உரிமையாளர் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1. | 390 | 495 | 8B | 0.29.00 | திருமதி.ப.மோகனா, க/பெ.ஆர்.உமாபதி, போந்தூர் ஆ கிராமம், திருப்பெரும்புதூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம். |
| | | | மொத்தம் | **0.29.00** | |

மேற்காணும் விவசாயம் அல்லாத நிலத்தில் 1432 முதல் 3 பசலி ஆண்டுகள் அடங்கல் பஞ்சர் எனவும், குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க தடையில்லாச் சான்று வழங்கப்படுகிறது.

19/5/23

வேளாண்மை இணை இயக்குநர்,
காஞ்சிபுரம்.

பெறுநர்:

திருமதி.ப.மோகனா,
க/பெ, R.உமாபதி,
எண்.17, பாரதியார் தெரு,
சக்தி நகர், பாடி,
சென்னை–600 050

19/5/23

நகல்: துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
எண்.33I/95, கோட்ரம்பாளையம் தெரு, ரங்கசாமி குளம் அருகில்,
(Old Employment Office) காஞ்சிபுரம் மாவட்டம் 631 501.